# அம்ரிதா பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா




**கோவை, ஆக.25-**

அம்ரிதா பல்கலைக் கழகம், தனது 13வது பட்டமளிப்பு விழாவில் 2,212 பெண்கள் உள்பட மொத்தம் 4,477 மாணவர்களுக்கு பட்டங்கள் வழங்கியது.

வழங்கப்பட்ட 36 முனைவர் பட்டங்களில் 19 பேர் பெண்கள் ஆவார்கள். மேலும், அனைத்து ஐந்து பல் கலைக் கழகங்களிலிருந்து நூறு மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்கியதற்காக தங்கம் மற்றும் வெள்ளிப் பதக்கங்கள் பெற்றனர்.

பட்டம் பெற்ற மாணவர்களில்பெருமளவு எண்ணிக்கையில் 1,896 பேர் பி.டெக் பிரிவைச் சார்ந்தவர்கள் ஆவார்கள். அதையடுத்து எம்.டெக் 473, எம்சிஏ 196, எம்பிஏ 191, பிசிஏ 188, பி.காம் 162, பி.எஸ்சி 131, எம்பிபிஎஸ் 95 மற்றும் இதர பிரிவைச் சார்ந்தவர்கள் ஆவார்கள். பொறியியல், வணிகம், மருத்துவம், உயிரி தொழில்நுட்பம், நானோ தொழில் நுட்பம், கலை மற்றும் அறிவியல், பல் மருத்துவம், செவிலியர் துறை, ஆயுர்வேதம், மருந்தாக்கம், சமூகப்பணி, தொலைத்தொடர்பு மற்றும் ஆசிரியர் கல்வி போன்ற அனைத்து பிரிவுகளையும் சார்ந்த மாணவர்கள் அங்கம் வகித்தனர்.

சிறப்பு விருந்தினராக வந்திருந்த இந்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை, செயலாளர், பேராசிரியர் அஷுதோஷ் ஷர்மா தனது பட்டமளிப்பு உரையில், ''இந்தியா தனது உயர் கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கையை பன்மடங்கு உயர்த்த வேண்டும் என்பதுடன் உலகத்தரம் வாய்ந்த பல் கலைக் கழகங்களையும் உருவாக்க வேண்டும். எங்கும் வன்முறை அதிகரித்து வரும் உலகில் மாணவர்கள் ஒரு புதிய மாற்றத்தை உருவாக்க வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார். அவர் மேலும் கூறுகையில், ''2030 ம் ஆண்டு முடிவில் உயர்கல்வி நிறுவனங்களில் நுழை வதற்கு 140 மில்லியன் இளைஞர்கள் ஆயத்தமாக இருக் கும் நிலையில் உலகிலேயே இந்தியா ஒரு மிகவும் இளமையான நாடாக திகழும். ஒரு புதுமைப் படைப்பு கொண்ட மனப்பாங்குடன் கூடிய உயர்கல்வி என்பது இந்த மக்கள் தொகை பெருக்கத்தை உத்வேகப்படுத்துவதற்கு முக்கியமாகும். இந்திய உயர்கல்வி முறையானது தரத்திற்கும், எண்ணிக்கை அளவிற்கும் இடையே ஒரு சமர்ச்சீர் அளவை பேணுவதன் மூலம் அறிவார்ந்த பொருளாதாரத்தில் தன்னை உயர்த்திக்கொள்ள வேண்டும். மேலும், தொழில் திறன் உருவாக்குதல் மற்றும் கற்பித்தலில் முனைப்பு செலுத்தும் கல்வி நிறுவனங்களோடு புதுமைப் படைப்பு மற்றும் ஆராய்ச்சியில் மேன்மை மையங்களாகத் திகழக்கூடிய இன்னும் பல உலகத்தரம் வாய்ந்த பல்கலைக்கழகங்களை உருவாக்குவதற்கு ஒரு தேவையும் உள்ளது. இவை, இந்தியாவை அறிவாற்றல்மிக்க ஒரு மகா சக்தியாக மாற்றும் என்பது உறுதி. இவ்வாறு அவர் பேசினார்.

மேலும் பல்கலையின் தலைவர் அமிர்தஸ்வரூபானந்தா, துணை வேந்தர் வெங்கட்ரங்கன், இயக்குனர் சி.பரமேஸ்வரன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.